**செய்தி வெளியீடு எண்: 174** **நாள்: 15.03.2013**

# செய்தி வெளியீடு

நலமான நாடே வளமான நாடாகும். மக்கள் நல்வாழ்வு என்பது ஒரு சமுதாயத்தின் அனைத்து வளர்சியிலும் முக்கிய பங்கு வகிக்கிறது. நாட்டின் ஒட்டு மொத்த வளர்ச்சிக்கு அடித்தளமாக அமைவது மக்களின் ஆரோக்கியமாகும். நோயற்ற வாழ்வாகிய குறைவற்ற செல்வத்தை அனைவரும் பெற வேண்டும் என்பதன் அடிப்படையில், தமிழகத்தில் ஏழை எளிய மக்கள் அனைவருக்கும் உயர்தர மருத்துவ சிகிச்சை கிடைக்கும் வகையில் பல்வேறு திட்டங்களை மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் செல்வி ஜெ ஜெயலலிதா அவர்கள் தலைமையிலான அரசு செயல்படுத்தி வருகிறது.

நகர்புற மக்களுக்கு இணையாக கிராமப்புற மக்களுக்கும் மருத்துவ வசதி கிடைக்கச் செய்யவேண்டும் என்ற உன்னத நோக்கத்துடன், கிராமப்புறங்களில் உள்ள ஆரம்ப சுகாதார நிலையங்கள் தரம் உயர்த்தப்பட்டு, அவசர மகப்பேறு, அறுவை சிகிச்சை போன்றவற்றிற்குத் தேவையான அனைத்து உபகரணங்களும் அளிக்கப்பட்டுள்ளன. இது மட்டுமல்லாமல் தமிழகத்தில் பல்வேறு மருத்துவ நிலையங்களுக்கு புதிய கட்டடங்கள் கட்டுதல், பழுதுபார்த்தல், புதிய மருத்துவ நிலையங்கள் ஏற்படுத்துதல் போன்ற பல்வேறு நடவடிக்கைகள் எடுக்கப்பட்டு வருகின்றன.

தன்னலம் கருதாது, கால நேரம் பார்க்காமல் செயலாற்றிக் கொண்டிருப்பவர்கள் பொது சுகாதாரம் மற்றும் நோய்தடுப்பு மருந்துத் துறையின் கீழ் பணிபுரிந்து வரும் கிராம சுகாதார செவிலியர்கள். இவர்கள் தாய் சேய் நலம் மற்றும் நோய்தடுப்பு உள்ளிட்ட அனைத்து நல வாழ்வு பணிகளிலும் துணை சுகாதார நிலையங்கள் மூலம் முக்கிய பங்காற்றுகின்றனர்.

கிராம செவிலியர் ஒவ்வொருவரும், அவர்களின் அன்றாட பணிகளுக்கிடையே பொது சுகாதாரம் மற்றும் நோய்தடுப்பு மருந்துத் துறையின் வெவ்வேறு திட்டங்களின் முன்னேற்றத்தினை பதிவு செய்யும் பொருட்டு பல்வேறு பதிவேடுகளை பராமரித்து வருகின்றனர். மேலும் அவர்கள் டாக்டர் முத்துலட்சுமி ரெட்டி மகப்பேறு திட்டத்தின் கீழ் கர்ப்பிணிப் பெண்கள், குழந்தைகள் மற்றும் பிரசவித்த தாய்மார்கள் ஆகியோர் பற்றிய விவரங்களை கணினி மூலம் தினந்தோறும் பதிவு செய்து வருகின்றனர். இந்த விவரங்களை கணினியில் பதிவு செய்வதற்காக அருகிலுள்ள வலைதள மையங்களுக்கும், அதாவது Browsing Center-களுக்கும், ஆரம்ப சுகாதார நிலையங்களுக்கும் செல்ல வேண்டிய கட்டாயம் உள்ளது.

எனவே, கிராம சுகாதார செவிலியர்களுக்கு ஏற்படும் காலவிரயத்தினை குறைக்கும் வகையிலும், அவர்கள் பணி மேம்பாடு அடையும் வகையிலும், அவர்களுக்கு விலையில்லா மடிக்கணினிகள் வழங்க மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் செல்வி ஜெ ஜெயலலிதா அவர்கள் உத்தரவிட்டுள்ளார்கள். இதற்காக 19 கோடியே 17 லட்சம் ரூபாய் நிதி ஒதுக்கீடு செய்தும் மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் செல்வி ஜெ ஜெயலலிதா அவர்கள் உத்தரவிட்டுள்ளார்கள். இதன் மூலம் பொது சுகாதாரம் மற்றும் நோய்தடுப்பு மருந்துத் துறையின் கீழ் மாநிலம் முழுவதும் பணியாற்றும் 9,397 கிராம சுகாதார செவிலியர்கள் பயன் அடைவார்கள்.

அரசின் இந்த நடவடிக்கைகள் கிராம சுகாதார செவிலியர்கள் பணித்திறன் மேம்பாடு அடைய வழிவகுக்கும்

*******

வெளியீடு:- இயக்குநர், செய்தி-மக்கள் தொடர்புத்துறை, சென்னை-9.
நாள்:- 15.3.2013.